உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 4 October 1942 No. 10

விஷய சூசிகை. பக்கம்

பலவகை (பண்டிட் நாராயணய்யங்கார்)	65–68
ஔஷதசாரம் ஷை	1—6
ஜ்வரம் (மதுக்கூர் Dr. K. ஷாரோடி)	7–14
ஓஷதி சந்தேகம் (ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜசாஸ்திரி அவர்கள் திருச்சி)	14–18
வைத்தியச்செய்தி	18

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher

No. 2, Police Station West Lane, Madura.

[விலை 0—3—0.

டால் வாலையைத்திறந்து மூன்று தோலா மாச்சக்காய் பொடியைப் போட்டு முன்போல சீலைமண் செய்து திராவகம் இறக்கவும். வாலையின்பேரில் குளிர்ந்த ஜலம் விட்டுக்கொண்டே இருக்கவேண்டும். விறகு எட்டி, பூவரசு, ஆவரை, புளியமரம், இவைகளில் ஏதாவது ஒரு ஜாதி விறகாக இருக்கவேண்டும். உள்ளுக்கு ஒரு தோலா அதாவது மூன்று டீஸ்பூன் அளவு திராவகத்தைக் கொடுக்கவும். ஐந்து அல்லது ஏழு நாள் கொடுக்கவும். பத்தியம் கசப்பு, புளிப்பு, புகை, போகம் தள்ளுபடி, மேகத்தைச்சேர்ந்த சகல ரோகங்களும் தீரும்.

169. தாமிரக்கலும்பை வாங்கும் திராவகம்:—அத்திப்பட்டை, ...கைப்பட்டை, மாம்பட்டை, புங்கம்பட்டை, மூங்கில்குருத்து, ஆகாசத்தாமரை, தேள்கொடுக்கு யிலை, சதாபு இலை, கத்தரிப் பழுப்பு, கண்டங்கத்திரி, வெள்ளைக் கண்டங்கத்திரி, அம்மான் பச்சரிசி, விஷ்ணுக்கிராந்தம், சொக்கக்கீரை, கல்சுண்ணாம்பு, கசப்பு கருவாடு, இவை வகைக்குச் சேர் ஒன்று, கரியுப்பு சேர் 2. பொட்டுலுப்புசேர் ஒன்று, குழாய் கந்தகம்சேர் அரை, வெள்ளைப்பாஷாணம் தோலா இரண்டு, வீரம் ரூபாயிடை அரை, லிங்கம் ரூபாயிடை அரை, துத்தம், துருசு, வகைக்கு ரூபாயிடை அரை, வெங்காரம் தோலா ஒன்று, சீனிக்காரம் தோலா நான்கு, எண்ணை நவாச்சாரம் தோலா ஒன்று, பூமிசர்க்கரைக்கிழங்கு சேர் ஒன்று, கள்ளு வண்டல் ஒரு தோண்டி, பசுமோர், கொள்ளு கஷாயம், வகைக்கு ஒரு தோண்டி, கடலைப்புளிப்பு சீசா ஒன்று, பிராந்தி சர்க்கார் புட்டி ஒன்று, இவைகளைப் பெரிய சீமைஜாடியிலிட்டு ஊறப்போட்டு கையால் தொடாமல் 25 நாள் சூரியபுடம்வைத்துப் பிரதிதினம் கிளரிக்கொண்டுவரவும். திராவகம் கடுங்காரமாக இருக்கும். ஒரு பிங்கானில் திராவகத்தைவிட்டு அதில் தாமிரத்தைப்போட களும்பு வாங்கும். பிறகு முறைப்படி பஸ்மம்செய்து கொள்ளவும்.

170. ஜீரகத்திராவகம்:—ஒரு கலயத்தில் பாதிகலயம் ஜீரகம் போட்டு கலயத்தின் வாயில் சீசாவை வைத்து சந்துவாய்க்குச்சீலை மண்செய்து க்ரயவைத்து அடுப்பேற்றிக் கமலம்போல எரிக்க திராவகம் இறங்கும். இவ்விதமே ஓமம், சுக்கு, சாம்பிராணி, முதலியவைகளில் திராவகம் இறக்கவும்.

171, கந்தகபஸ்மம்:—கந்தகக்கட்டி பெரிதாக எடுத்து அன்னியெரிச்சான் பூண்டு வேர்ப்பட்டையையும் தழையையும் கொண்டுவந்து ஆண் அமரி (அமரி என்பது மூத்திரம்) யில் முப்பது நாழிகை ஊரவைத்து தனித்தனியாக அரைத்துஷைகட்டிக்கு முதலில் வேர்ப்பட்டை விழுதைக் வசம்செய்து காயவைத்து அதற்குமேல் தழைவிழுதைக் கவசம்செய்து காயவைத்து அதன்மேல் ஏழு சீலைமண் வலுவாகச்செய்து ஒருமணிநேரம் காயவைத்து கதுவாலி புடத்திற்குமேல் போகாமல் புடம் இடவும். பஸ்மமாகும். வெண்ணையில் பணவிடை உள்ளுக்குச்சாப்பிட மேகவாயு, சூலக்கட்டு, சுன்மவாயு, தீரும் ஷை பஸ்மத்தில் சப்ஜாவிதை, பாத்தங்குவிதை, இஸ்கூல்விதை, இவை மூன்றும் வகைக்குப்பணவிடை எடுத்துப் பொடிசெய்து அதில் அரைப்பணவிடை பஸ்மம் சேர்த்து மூன்றுநாள் ஆறுவேளை கொள்ள தந்திமேகம், மதுமேகம், தாதுநஷ்டம் முதலியன தீரும், பத்தியம் பாலும்சாதம்.

172. கந்தகமெழுகு:—கந்தகத்தைப் பாலில் சுத்திசெய்து பாகனபேரி இடித்து ரஸம் பிழிந்து ஷை கந்தகத்தை ஷை ரசத்தால் கல்வத்திலிட்டுக் கைவிடாமல் நான்கு ஜாமம் அரைக்க மெழுகாகும். ஷை மெழுகில் தூதுவளங்காய் பிரமாணம் ரோகிகளுக்குக்கொடுக்க மலம் கழியும், வாயு, உடம்புகுத்தல், வயிற்றுவலி தீரும். இச்சாபத்தியம். குறிப்பு:—பாகனபேரி என்பது மெழுகுபாகல்.

173. லிங்கச்சிந்தூரம்:-லிங்கக்கட்டியை ஓர் ஓட்டில்வைத்து அடுப்பேற்றி கமலம்போல் எரித்து ஓர் ஓட்டில்வைத்து மேனிச்சாறும் முலைப்பாலும் சரிகூட்டி கால்படிசார் சுருக்கு கொடுக்கவும், அதை எடுத்துக்கழுவி கல்வத் திலிட்டு மேனிச்சாரால் நான்கு நாழிகை அரைத்துப் பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடிசீலைமண்செய்து முழ உயரம் உமிகொட்டி அதன்நடுவில் வைத்துப்புடமிடவும். பிறகு வெடியுப்பு ஜயநீரால் அரைத்துபில்லை செய்து காயவைத்து முன்போல் ஓட்டில் வைத்து முன்போல் புடமிடவும். சிந்தூரமாகும். பணவிடை தேனில் கொள்ள சுரம், சன்னி, சைத்தியம், வாயு, தீரும்.

174. லிங்கமெழுகு:—லிங்கத்தை முன்போல சுருக்குக் கொடுத்து எடுத்துக்கல்வத்திலிட்டு உள்ளிப்பூண்டு ரஸம்விட்டு நான்கு நாழிகை அரைக்க மெழுகு ஆகும். ஷை மெழுகில் தூதுவளங்காய் பிரமாணம் மூன்றுநாள் ஆறுவேளைகொள்ள. வாயு முதலியன தீரும். உப்பில்லாபத்தியம்.

175 லிங்கக்கோழம்பு:—லிங்கம் விராகனிடை நான்கு, ரஸகர்ப்பூரம், எண்ணெ வெங்காரம் விராகனிடை இரண்டு, சுத்தியான நேர்வாளம் விராகனிடை எட்டு, ஆமணக்குப் பருப்பு விராகனிடை நான்கு, இவைகளைக் கல்வத்திலிட்டுக் குமரிச்சார்விட்டு இரண்டு யாமம் அரைக்க மெழுகாகும். ஷை மெழுகில் கடலைப்பிரமாணம் பச்சைத்தண்ணீரில் கரைத்து உள்ளுக்குக்கொடுக்கப் பேதியாகும். வென்னீர் சாப்பிட பேதி நிற்கும். அனுபானம்—வயிற்றுவலிக்குப் பிரண்டை கஷாயத்திலும், சூலை, கைகால்முடக்கு, குத்து, துடிப்பு, இவைகளுக்குக் கொடுவேலிவேர் கஷாயத்திலும், அண்டவாயு, சூலை, இவைகளுக்குக் பெருங்காயம், வெள்ளுள்ளி, முருங்கை, [illegible] சர்க்கரை; இவைகளைச் சமமாக எடுத்து அரைத்து [illegible]ழுதிலும், கிரந்திகளுக்கு கொடுவேலி, குப்பைமேனி, இவைகளை இடித்துச் சார் எடுத்து இரண்டு ரஸங்களையும் கலந்து விளக்கெண்ணெயில் காய்ச்சி அதிலும், தாபசுரம், ஜன்னி, இவைகளுக்கு அஞ்சனமாகவும், கடிவிஷங்களுக்குத் தாமரையிலைச்சாற்றிலும், அல்லது சின்னியிலை ரஸத்திலும், சய்யான்கடி முதலியவைகளுக்குச் சின்னியிலை ரஸத்திலும், வாதசுரங்களுக்கு நொச்சியிலைச் சாற்றிலும், வாதத்திற்கு உத்தாமணி ரஸத்திலும் கொடுக்கவும்.

176. தாளகபஸ்மம்:—தாளகம்கால் அன்றியில் ஒரேகட்டியாக எடுத்து ஓர் புதுச்சட்டியில் நீற்றின சுன்னக்கல் அரைப்படி வைத்து அதன்மேல் ஷை தாளகக்கட்டியை வைத்து அதன்மேல் ஷை சுன்னக்கல் அரைப்படி கொட்டி மூடிதேசி (தேசி என்பது கழுதை) நீர்சுன்னக்கல் முழுகவிட்டு மேலே சட்டி மூடவும். ஆறின பின் எடுத்து ஷை தாளகக்கட்டியைக்குழி சட்டியிலுள்ள சுண்ணாம்பு வகையறுவை விலக்கிவிட்டு முன்போல சுன்னக்கல்போட்டு முன்போல் தாளகக்கட்டியை வைத்து முன்போல் தேசிநீர்விடவும்.

இவ்விதம் பத்துதடவை செய்யச் சுத்தியாகும். தேசிநீர் கிடைக்காவிட்டால் பனம்கள்ளை எடுத்துக்கொள்ளவும். பிறகு ஷை கட்டியை வெய்யிலில் வைத்துப்பிறகு பெரிய அம்மான் பச்சரிசியை ஆண் அமரி (அமரி என்றால் மூத்திரம்) தெளித்து அரைத்து ஷை கட்டிக்குக் கவசங்கட்டி ஏழு சீலைமண்செய்து அத்திக்கட்டையை 12 அங்குல நீளம் கண்டைக்கால் பருமன் உள்ளதாகப் பச்சையாக எடுத்து நடுவில் குடைந்து அந்தப்பள்ளத்தில் ஷை கட்டியை வைத்து ஷை கட்டையால் ஷை வாயை மூடி வாய்க்குச்சீலைமண் செய்து வராகபுடத்திற்கு உயராமல் குக்குடத்திற்குக் குறையாமல் கட்டை வேகும்படி புடமிட்டு ஆறவிட்டு எடுக்கப் பஸ்மமாகும். ஷை பஸ்மத்தில் பணவிடை தேனில் கொள்ள க்ஷயம், சுவாஸ காஸம், ஈளை, இருமல், அஸ்திசுரம், பாரிசவாயு, ஜன்னி முதல் தீரும். பதியம்—பாலும்சோறு. காசத்திற்குக் கால்மண்டலம் கொள்ளவும்.

177. தாளகச்சிந்தூரம்:—முன்போலச் சுத்திசெய்த தாளகக் கட்டிக்கு ஷை அம்மான் பச்சரிசியை அரைத்துக்கவசம்கட்டிச்சீலை மண் வலுவாகச்செய்துக் காடை புடத்திற்குமேல்பட்டுக் கஜுவாலி புடத்திற்குக் குறைந்தபுடமிட உருகிக்கட்டும், ஷை கட்டை உடைத்துப்பொடிசெய்து ஒருநத்தைக் கையாந்தகரையின் சாற்றில் அரைத்து உலர்த்தி, பின் பலாசம்பூச்சாற்றிலரைத்து உலர்த்திப் பின், எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து உலர்த்தவும். அப்பால் ஷை துப்பொடிசெய்தும் கல்சீசாவில் அரை சீசா நிரப்பி சீசாவின் வாய்க்கு மாக்கல் தேய்த்த மூடிசெய்து உளுத்தம்மாவால் ஏழு சீலைசெய்து ஒரு சட்டியில் நான்குவிரல் உயரம் மணல்கொட்டி ஷை சீசாவை மணல் நடுவில் வைத்துப் பிறகு சட்டியின் கழுத்து வரையில் மணல்கொட்டி மேல்சட்டிமூடி சீலைமண்செய்து கமலாக்னியாக இரண்டுயாமம், காடாக்னியாக இரண்டு யாமம் எரித்து ஆறவிட்டு எடுத்து முன்போல ரஸங்களால் அரைத்து உலர்த்தி முன்போல சீசாவில் வைத்து முன்போல எரித்து ஆறவிட்டு எடுக்க அருணன்போலச் சிந்தூரமாகும். பணவிடை தேனிலாவது, பசு நெய்யிலாவது கொள்ள முன்சொன்ன ரோகங்கள் தீரும். உப்பில்லாப்பத்தியம்.

ஔஷதஸாரத்தில் சொல்லப்பட்ட ரோகங்களின் அட்டவணை.

ரோகங்களின் பெயர்	பக்கம்.
அக்னிமந்தம்	59
அண்டரோகங்கள்	81
அதிசாரம்	67
அம்லபித்தம்	87
அரோசகம்	55
ஆமவாதம்	108
ஆஸ்த்மா	42
இருமல்	35
உதர்த்தம்	98
காஸம்	35
கிராஹணி	68
கிருமிரோகம்	58
குன்மம்	88
குஷ்டம்	99
[illegible]	98
க்ஷயம்	44
சீதபித்தம்	98
ஜ்வரம்	3
ஜ்வரக்கட்டி	29
சுவாஸம்	42
சூலம்	83
சோபம்	97
தாகம்	56
நிமோனியா	42
பரிணாமசூலம்	86
பாண்டு	94
பிரமேஹம்	73
மஹோதரம்	92
மசூரி	99
மூத்திராகாதம்	71
மூத்ரகிருச்சிரம்	71
மூலரோகம்	61
ரக்தபித்தம்	32
ரஸாயனம்	111
வாதரோகங்கள்	105
வாஜீகரணம்	112
விக்கல்	53
விப்புருதி	81
விருத்தி	81
விஸர்ப்பம்	99
வீக்கம்	97
வைசூரி	99
ஸ்வரபங்கம்	54
ஹிருதயரோகம்	57

ஔஷதஸாரத்தில் சொல்லப்பட்ட மருந்துகளின் அட்டவணை.

மருந்துகளின் பெயர்	பக்கம்.
அக்னிகுமாரன்	60
அக்னிமுககுூர்ணம்	59
அபயாலவணம்	30
அபயாரிஷ்டம்	93
அபயாரிஷ்டம்	62
அப்பிரகச்சிந்தூராதி	91
அமிருதாரிஷ்டம்	14
அமிருதாதி	99
அம்லபித்தாந்தக லோகம்	88
அயச்சிந்தூரம்	91
அர்க்ககுடீ	38
அர்க்கலவணம்	30
அவிபத்திகரசூர்ணம்	87
அஜமோதாதி வடகம்	108
ஆமலகாரிஷ்டம்	64
உசிராஸவம்	34
கதுபாதி சூர்ணம்	57
கடுபாதி சூர்ணம்	45
கண்டகாத்ய லௌஹம்	33
கதல்யாதிகிருதம்	76
கதிராதிகுடீ	42
கநகாஸவம்	43
கநகசுந்தரரஸம்	70
கந்தககஜ்ஜலி	24
கர்ப்பூரரஸம்	68
கலியாணலேஹம்	54
கலியாணலேஹம்	105
கலிங்காதிகஷாயம்	11

மருந்துகளின் பெயர்	பக்கம்.
காகஜங்கா	45
காங்காயனவடீ	88
காமாக்னிஸந்தீபனம்	115
காஸலக்ஷ்மீவிலாஸரஸம்	40
கிருததைலபாகம்	104
குசாவலேஹம்	74
குடஜலேஹம்	66
குடஜாரிஷ்டம்	67
கூச்மாண்டகண்டம்	32
கூச்மாண்டலேகியம்	48
கைசோரகுக்குலு	107
கைசோரகுக்குலு	110
கோலாதிகிருதம்	48
க்ஷாரதாம்ரம்	85
சங்கத்ராவகம்	89
சங்கவடீ	86
சங்கபோடலீ	47
சதாவரீமோதகம்	112
சதுஸ்ஸமலௌஹம்	84
சந்திரபிரபாகுடிகா	61
சந்திராமிருதலௌஹம்	39
சரபுங்காயோகம்	29
சன்னிபாததாவாநலம்	18
சாரிபாதி கஷாயம்	56
சிஞ்சாசங்கவடீ	90
சிந்தாமணி	58
சிருங்கபஸ்மம்	86
சிருங்கார அப்ரகம்	41

ஔஷதஸாரத்தில் சொல்லப்பட்ட மருந்துகளின் அட்டவணை.

மருந்துகளின் பெயர்	பக்கம்.
ஶிரோலேபம்	26
ஶிலாஜது சூர்ணம்	79
ஶிலாஜது வடகம்	95
ஸுதர்சனசூர்ணம்	7
சுரமாத்திரை	12
ஸ்வர்ணகடிசமகரத்வஜம்	26
ஸ்வர்ணமாலினீவஸந்தம்	23
ஸ்வல்பசூர்ணமோதகம்	65
ஸ்வாஸகாஸ சிந்தாமணி	44
ஸூலிகா	92
ஸைலூஷாதி ரஸாயனம்	78
ஸௌவர்சலாதி	55
தசமூலாதி	98
தந்தி அரிஷ்டம்	63
தந்திஹரீதகீ	90
தன்வந்தரிரஸம்	20
தலபோகடகசூர்ணம்	79
தாப்யாதிவடகம்	94
தாமிரபஸ்மம்	39
தாளகபஸ்மம்	45
தாளகேஸ்வரம்	100
துராலபாரிஷ்டம்	64
த்ரிகண்டகாதி	71
த்ரிகத்ரய லௌஹம்	96
நரஸிம்ஹ சூர்ணம்	112
நாகபலா	44
நாகார்ஜுனயோகம்	66
நாராயணகுடம்	78

மருந்துகளின் பெயர்	பக்கம்.
நிம்பாதி சூர்ணம்	21
பஞ்சதிக்தகிருதம்	99
பஞ்சதிக்த குக்குலுகிருதம்	100
பஞ்சமேலர்ஹ ரஸாயனம்	79
பஞ்சவக்த்ரரஸம்	18
பஞ்சாமிருத லௌஹ மண்டூரம்	96
படோலாதி கஷாயம்	99
பத்யாதி சூர்ணம்	59
பப்பூலாரிஷ்டம்	67
பர்பாடகாரிஷ்டம்	96
பலாரிஷ்டம்	105
பல்லாதகலேஹியம்	102
பாடாதி	63
பாடாதி சூர்ணம்	52
பார்ங்கிகஷாயம்	37
பார்ங்கிகுடம்	42
பார்த்தாரிஷ்டம்	57
பாஷாணபஸ்மம்	3
பாஸ்கரலவணம்	83
பிந்துகிருதம்	92
பிரவாள பஞ்சாமிருதம்	89
பிராணதாகுடு	61
புநர்நவாகஷாயம்	98
புநர்நவாஸவம்	97
பூநிம்பாதி கஷாயம்	99
பேயத்திரஸம்	34

ஔஷதஸாரத்தில் சொல்லப்பட்ட மருந்துகளின் அட்டவணை.

மருந்துகளின் பெயர்	பக்கம்.	மருந்துகளின் பெயர்	பக்கம்.
மகாகாலாக்னிருத்ரரஸம்	18	ரஸராஜரஸம்	105
மகாக்ரவ்யாதரஸம்	60	ரஸாப்ரகுக்கலு	110
மகாகங்காதர சூர்ணம்	68	ரஸாயநாமிருத லௌஹம்	91
மகாகந்தகம்	68	ராமபாணரஸம்	109
மகாகாமேசுவரமோதகம்	114	ராஜமிருகாங்கரஸம்	46
மகாசூரணமோதகம்	65	ராஸ்நாதிகஷாயம்	107
மகாகோக்ஷுராதிலேஹம்	80	ராஸ்நாதிகஷாயம்	108
மகாசோமநாதரஸம்	75		
மகாதாத்ரீலோஹம்	88	லகுமாலினீவஸந்தம்	24
மகாதாளகேசுவரம்	100	லவங்காதிவடம்	42
மகாராஜவல்லபம்	69	லாக்ஷாதி சூர்ணம்	41
மகாவங்கேசுவரம்	75	லாஹிசூர்ணம்	71
மகாவாதசிந்தாமணி	44		
மகாஹரித்ராகண்டம்	98	வடசங்காதி	57
மண்டூரம்	96	வருணாதிகஷாயம்	72
மண்டூரவடகம்	94	வருணாதிகிருதம்	73
மதுஸ்னுஹீரஸாயனம்	77	வஸந்தகுஸுமாகரரஸம்	76
மூக்காமூக்கடுகொதி	13	வாசாகண்டம்	34
		வாசாகூச்மாண்டகண்டம்	33
யக்ஷ்மாரிலௌஹம்	52	வாரிசோஷணரஸம்	93
யவக்ஷாரகுடம்	37	வாஸிஷ்டரஸாயனம்	49
யவானீஷாடபம்	55	விடங்காரிஷ்டம்	108
யோகநாதரஸம்	17	விதாரீகிருதம்	71
யோகராஜகுக்கலு	106	வியோஷாதி சூர்ணம்	59
யோகராஜகுக்கலு	106	விஜயசூர்ணம்	66
யோகேந்திரரஸம்	105	வைச்வாநர லௌஹம்	85
ரதிவல்லபமோதகம்	113	ஷட்குணபலிஜாரிதம்	26
ரஸபர்படம்	69		
ரஸமண்டூரம்	84		

ஔஷதஸாரத்தில் சொல்லப்பட்ட மருந்துகளின் அட்டவணை.

மருந்துகளின் பெயர்	பக்கம்.
ஸர்பிர்குடம்	50
ஸாமுத்ராகாதி சூர்ணம்	86
ஸாரஸ்வதகிருதம்	54
ஸாரஸ்வதாரிஷ்டம்	54
ஸாரஸ்வதாரிஷ்டம்	112
ஸாரிபாதிகஷாயம்	77
ஸிக்தகாதி	101
ஸித்தப்ராணேசுவரரஸம்	25
ஸுகுமாரமோதகம்	60
ஸூதவடீ	38
ஹரித்ராகண்டம்	98
ஹரீதகீகண்டம்	83
ஹரீதக்யாதிகுடீ	13
ஹிங்குவாதி சூர்ணம்	59
ஹிங்குவாதி சூர்ணம்	90
ஜபநீர்	89
ஜ்வரபைரவ சூர்ணம்	22
ஜ்வராந்தகலௌஹம்	9
ஸ்ரீசந்திராமிருதரஸம்	35
ஸ்ரீ நீலகண்டரஸம்	111
ஸ்ரீ மகாலக்ஷ்மீவிலாஸரஸம்	111
ஸ்ரீ பாகுசாலகுடம்	64
ஸ்ரீ ஜயமங்களரஸம்	21

முற்றிற்று.

(மதுக்கூர் டாக்டர் K. ஷாரோடி அவர்கள்)

பின்னும், வாதஜ்வரமா, பித்தஜ்வரமா, கபஜ்வரமா, வாதபித்த ஜ்வரமா, வாதகபஜ்வரமா, பித்தகபஜ்வரமா, ஸந்நிபாதஜ்வரமா, ஆகந்துகஜ்வரமாவென்று பகுத்தறிதல் வேண்டும். ஜ்வரத்தின் ஆமாவஸ்தை, பச்யமானுவஸ்தை, பக்வாவஸ்தைகளையும் நிரூபித்தல் வேண்டும். அவ்விதம் செய்யின் குறிப்பிட்ட கோளாறுக்கு குறிப்பிட்ட நிலைமையில் குறிப்பிட்ட உபசாரம் செய்துகொள்ளப் பயனளிக்கும். ஜ்வரத்தின் ஸாமான்யமான முன் குறிப்புகள் 'தஸ்யப்ராக்ரூபமாலஸ்யம" முதலிய லக்ஷணங்கள் சாஸ்திரங்களில் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே தனித்தனி வாதாதி ஜ்வரங்களின் லக்ஷணங்களும், த்வந்துவங்களின் அறிவுகளும் ஸமுதாயத்தின் ரூபங்களும் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டுள்ளவைகள் விஸ்தார பயத்தினுல் இங்கு எடுத்துக் காண்பிக்கவில்லை. ஆயினும் அதுதுகளின் தனி லக்ஷணங்கள் (வாதாதிகளின்) அந்தந்த ஜ்வரத்திற்கிருப்பதோடு தொந்துவத்தின் குறிப்புகள் தொந்துவ ஜுரத்திற்கும் ஸமுதாயக் குறிப்புகள் ஸமுதாயத்திற்குமிருப்பதைக் கண்டறிய வேண்டியது என்பது சுருக்கம்.

"ஜிரும்பாங்கமர்தோகுருதா", என்றபடி கொட்டாவி, திரேகக கடுப்பு. திரேகக்கனதி, மயிர்கூச்சல், அரோசகம் முதலிய குறிப்புகள் உண்டாகப்போகும் சுரத்தை எச்சரிக்கின்றன. நடுக்கல், கட்டுப்பாடில்லாத சுரவேகம் (காலாகாலத்தைப் பொறுத்தது) தொண்டை உதடுகள் மூகங்களின் உலருதல், தூக்கமின்மை தும்மல் தடை, திரேகவாசுகிகள், [தலைவலி, மார்வலி, (ஹிருதயம்) திரேகவலி, வாயில் ருசிதெரியாத்தன்மை, கொட்டாவி, மலபந்தம், வயிற்றுவலி, பொறுமல், வாதஜ்வரத்தின் கொள்கைகளாகும். அதிகவேகம் (சுர), மலக்கழிவு, தூக்கக்குறைவு, வாந்தி, கண்டம் உதடு, முகம், மூக்குகளின் பாகம் (புண்படுதல்) வியர்வை, புலப்பம், வாய்கசப்பு, மயக்கம், எரிச்சல், தண்ணீர் தாஹம், திரேகம், மலமூத்திரங்கள், கண்களில் மஞ்சள்வர்ணம் காண்பது, பித்தஜ்வரமாகும். திரேகத்தில உணர்ச்சிக்குறைவு, மந்தஜ்வரவேகம், அசதி, வாய்தித்திப்பு, மலமூத்திரம் தோல்களின் வெண்மை, பசி

யின்மை, பிரட்டல், (வயற்றில்) அதிகத்தூக்கம், மலபந்தம், அதிக மூத்திரப்பிரவிருத்தி, வாயில் தண்ணீர் ஊறுதல், வாந்தி, அதிகச் சூடின்மை, இருமல், சுவாஸம், நீர்கோர்வை, கண்ணிமைகளின வீக்கம், ஆகியவைகள் கபஜ்வரத்தில் காண்பவைகளாகும்.

தண்ணீர்தாகம், மயக்கம், எரிச்சல், தூக்கமின்மை, தலைவலி, கண்டம், வாய் இதழ்களின் உலர்ச்சி, வாந்தி, அரோசகம், கொட்டாவி, மயிர்கூச்சல், கணுக்களின் நோவு முதலியவைகள் வாதபித்தஜ்வர லக்ஷணங்களாகும். உணர்ச்சிக்குறைவு, பூட்டுக்களின்வலி, தூக்கவலிவு, மண்டைக்கனதி, நீர்கோர்வை, இருமல், வியர்வையின்மை, ஜ்வரத்தின் மத்தியமான உஷ்ணம், முதலியன கபவாதஜ்வரக் குறிப்புகள். வாயில் கசப்பு, பிசுபிசுப்பு, சோம்பல், மயக்கம், இருமல், தண்ணீர்தாகம், அரோசகம், இரேக எரிச்சல், இரேக குளிர்ச்சி (அடுக்கடி) முதலியன பித்த கபஜ்வரக்கோளாறுகளாகும். இவைகளின் அதிக விவரங்களை நூல்களில் பார்த்துக் கொள்ளுவதே விசேஷமாகும். இனி ஸன்னிபாதமென்றும் ஜ்வரத்தைக் கூறவேண்டியிருக்கின்றது. பிராணிகளை விசேஷ விதியில் கெடுக்கின்றவைகள் ஸந்நிபாதங்கள் எனக்குறிப்பிடுகிறது. முன் கூறப்பட்டபடி விபரீதங்களினால் கெடுதலையடைந்தத் திரிதோஷங்கள் ஸந்நிபாதஜ்வரத்தை உண்டுபண்ணுகின்றன. காரிய நிர்வாகத்தின் பொருட்டு ஒரு காரணமோ பல காரணங்களோ ஏற்படுவது ஸகஜமாகும். அதுபோல் திரிதோஷக் கெடுதல்களை ஏற்படுத்த முன் கூறிய பல காரியங்களிருப்பது நியாயமே. காரணங்களின் குறைவு காரியங்களையும் பாதிக்குமல்லவா. இவ்விதம் பலமான கெடுதல்களை யடைந்த தோஷங்கள் அனந்த காரியமான ஸன்னிபாதத்தை உண்டுபண்ணுவதும் நியாயமாகும். ஆனால் இம்முறையும் ஆமம் என்ற ஜீர்ணப்பிசகைப் பொறுத்ததாகும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. ஆமதோஷத்தினுடைய் வலிவுகளைப் பொறுத்து ஏகதோஷஜமாகவும் தொந்தஜமாகவும் திரிதோஷஜமாகவும் (அஸாத்மியேந்திரியார்த்த ப்ரக்யாபராத பரிணமபேதாத்) கிரிஸாஜௌகரியத்தை முன்னிட்டு நமக்குப் பிரித்துக்காண்பித்திருக்கின்றன. இப்பிரிவினைகளின் அம்சாம்சக்குறிப்புகளை யறிந்து அவசியானுஸாரம் நாம்

நடந்துகொள்ளவேண்டுமென்ற ஆதேசம் நமக்கு இதனால் ஏற்பட்டுள்ளது. திரிதோஷச் சேஷ்டைகளில் பல இதன் பூர்வரூபங்களாகும் அதாவது தூக்கமின்மை, மயக்கம், தலைசுற்றல், தேக உணர்ச்சியின்மை, பிரக்ஞையின் தவறுதல், உளருதல், விரல்களின் நடுக்கம், வயிற்றுப்பொருமல், கனதி, வயிற்றுப்போக்கு, அல்லது மலபந்தம் தொண்டைவலி, வாய் உலருதல், அதிக தாகம், அல்லது அறவேயின்மை, தொண்டையில் கபக்கட்டு, குடல் எரிச்சல் நெஞ்சில்வலி கண்சிகப்பு, முதலியவைகள் காணும். "க்ஷணே தாஹ: க்ஷணே சீதம்" என்றபடி பாடுதல், ஓடுதல், சிரித்தல், உளறுதல், கண்ணீர்வடிதல் நாக்கில் பசபசப்பு, கண்களில் விகாரம், ரத்தம் அல்லது பித்தத்துடன் வாந்தி, தலையுருட்டுதல், கைகால்களைப் பிரட்டியடித்தல், துணியைக்கிழித்தல், கைவிரல்களின் நடுக்கம். பிறர்கைகளைப் பலமாகப்பிடித்தல், மிகுப்பேச்சு, அல்லது இன்மை, குடலில் எரிச்சல் நீடித்ததோஷபாகம், நித்திரையின்மை, அதிக வியர்வை, அல்லது இன்மை, அதிக தாகமல்லதின்மை, தொண்டையில் கபம்பேசுவது, தேகத்தின் வரக்ஷி, அல்லது பிசிபிசிப்பு, எலும்புகளில் வலி, பிரக்ஞையின்மை, நாக்கில் கருப்பு நிறம், மலமூத்திரங்களின் தாமதமான வெளிப்படுதல், வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, முதலியவைகள் இதன் ஸாமான்யரூபமாகும்.

தோஷங்களின் ஆதிக்யந்யூனதைகளைக் கண்டறிந்து வியாதி நிர்ணயத்தைக் (சந்தேகப்படுமிடங்களில்) கண்டறிந்துக் கொள்ளுமுபாயமே உபசயவார்த்தையினால் கூறப்படுவது. இதன் உதவியினால் பரிகாரமுறை கிஞ்சித் சுலபமாகவேற்படுகிறது. இப்பிணி (சன்னி) ஒன்றென்று குறிப்பிடினும் தோஷங்களின் அதிகம்குறைவு ஸாம்யங்களினால் பதின்மூன்றுவிதமெனக்கண்டறிந்து கூறப்பட்டுள்ளது. அதாவது (1) வாதாதிக்யம், பித்தகபங்களின் குறைவு (2) பித்தாதிக்யம், வாதகபக்குறைவு, (3) கபாதிக்யம் வாதபித்தக்குறைவு (4) வாதபித்தாதிக்யம், கபத்தின் மந்ததை (5) வாதகபாதிக்யம்: பித்தமந்ததை (6) பித்தகபாதிக்யம் வாதமந்ததை (7) வாதக்கெடுதலைவிட பித்தக்கெடுதல் அதைவிடக் கபக்கெடுதல் (8) பித்தத்தை விடகபக்கெடுதல் அதைவிட வாதக்கெடுதல் (9) கபத்

தைவிட வாதக்கெடுதல் அதைவிட பித்தக்கெடுதல் (10) வாயுவைவிட கபக்கெடுதல் அதைவிட பித்தக்கெடுதல் (11) பித்தத்தைவிட வாயு அதைவிட கபக்கெடுதல் (12) கபத்தைவிட பித்தம் அதைவிட வாயுக்கெடுதல் (13) ஸமானபாவக்கெடுதலினால் ஏற்படுவது ஆக மொத்தம் ஸூக்ஷ்மரூப ஸம்பிராப்திக்ஞானத்தில் 13 வித ஸன்னிபாதங்கள் ஏற்படுவதாய் சொல்லப்பட்டிருப்பதை நாம் கண்டறிகின்றோம். இவ்வேற்றுமைகளுக்கு (1) ஸந்திகம் (2) அந்தகம் (3) ருக்தாஹம் (4) சித்தவிப்ரமம் (5) சீதாங்கம் (6) தாந்திரிகம் (7) கண்டகுப்ஜம் (8) கர்ணகம் (9) ப்ரலாபீ (10) புக்னநேத்திரம் (11) ரக்தஷ்டீவி (12) ஜிஹ்வகம் (13) அபின்யாஸம் என்னும் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(1) ஸந்திகம்:—இச்சன்னிபாத ஜ்வரத்தில் தோஷ ஹுஸாரம் லக்ஷணங்கள் காணப்படும். வாதோத்பன்னமாதலால் ஸந்திகளில் தாங்கமுடியாத பீடை அதிக வயிற்றுவலி, வீக்கம், கபம் வெளிப்படுதல் அதிக உஷ்ணம், பலக்குறைவு தூக்கமின்மை முதலியன பூர்வரூபத்திலும் தென்படுகின்றன. பின்னர் அதிகக்கஷ்ட நிலைமைகள் ஏற்படும்.

(2) அந்தகம்:—இதில் உஷ்ணம் மிகுதியாக விருக்கும் எரிச்சல், மயக்கம், சிரஸின் நடுக்கம், இருமல், விக்கல் முதலிய லக்ஷணங்கள் ஏற்படுவதோடு உஷ்ணம் வுாவர விருத்தியாகி மரணத்தை உண்டுபண்ணும் ஆகையால் இது அஸாத்தியமாகும்.

(3) ருக்தாகம்:—இதில் ஆந்தர உஷ்ணம் அதிகப்படுவதால் தாங்கமுடியாது ஏற்படுகிறது. பிதற்றல், புலம்புதல், மயக்கம், அக்னிமந்தம், ச்ரமம், தலைசுற்றல், கண்டம் கழுத்துகளில் வலி, வீக்கம், அதிக தண்ணீர் தாகம் இருமல், மூச்சுவிக்கல முதலியன ஏற்படுவதால் இக்கொள்கை அஸாத்தியமெனக் கூறப்பட்டுட்டுள்ளது.

(4) சித்தவிப்ரமம்:—இதில் சாமான்ய லக்ஷணங்களைவிட மயக்கம், சுற்றல், உஷ்ணப்பெருக்கு, கண்கலக்கம், ஆட்டம், பாட்டு உளருதல், தமோகஜாட்யம் முதலிய லக்ஷணங்களை உடையது. இது அஸாத்திய ஜாப்தாவில் சேர்ந்ததாகும்.

(5) சீதாங்கம்:—இதில் ஸாமான்ய லக்ஷணங்களைத் தவிர தேகம் ஜில்லிட்டுக்காணும் வியர்வை, சுவாஸம், விக்கல் தொண்டையடைப்பு, வாந்தி, வயிற்றுப்போக்கு முதலியன இதன் குறிகள் இவை அஸாத்தியத்தன்மையை போதிக்கக்கூடியன.

(6) தாந்திரிகம்:—இதில் தேகத்தில் அதிகச் சோம்பல் ஜுரம், வலி, கபக்கோளார், தண்ணீர்தாஹம், நாக்கில் கருப்பு, சொறசொறப்பு, வயிற்றுப்போக்கு, இளைப்பு காதில்வலி, தொண்டைத் தொந்திரவுகள், ஒரே படுக்கை முதலியன வுண்டாம்.

(7) கண்டகுப்ஜம்:—தலைபாரம், தொண்டைப்பிடிப்பு, சுரம் எரிச்சல், மயக்கம், நடுக்கம், மென்னிப்பிடிப்பு, பிதற்றல், முதலியன இதில் காணும். இதுவும் கடுமை ஜாப்தாவில் சேர்ந்ததே.

(8) கர்ணகம்:—உளருதல், கர்ணேந்திரியக்கெடுதல், தொண்டைப் பிடிப்பு, தேகபீடை, சுவாஸம், காஸம், வாணியூற்றல், ஜுரம், காதருகில் வீக்கம், வலி முதலியன காண்கிறமையால் கஷ்ட சாத்தியமானது. இச்சுரத்தின் ஆதியிலோ, மத்தியிலோ, கடைசியிலோ, காதண்டை வீக்கம் காண்பின் அஸாத்தியமாகவும், கஷ்டசாத்தியமாகவும், ஸாத்தியமாகவும் கருதப்பட்டுள்ளது.

(9) புக்னநேத்திரம்:—சுரம், பலக்குறைவு, பிரக்ஞையின்மை, மூர்ச்சை, கண்விழியின் கோணல், பிதற்றல், நடுக்கம் முதலியன கண்டு அசாத்தியக் குறிப்பு பெற்றதாகும்.

(10) ரக்தஷ்டீவி:—சுரம், ரக்தவாந்தி, தண்ணீர் தாகம் வயிற்றுவலி, வயிற்றுப்பேக்கு, வயிற்றுப்பல், மயக்கம், விக்கல், இளைப்பு, நாக்கில் செங்கருப்பு நிறம் முதலியன அஸாத்திய நிலைமையைக் குறிக்கின்றன.

(11) பிரலாபீ:—சிரசின் கோளாறுகள், தேக நடுக்கம், சுரம், பிதற்றல், அதிக வாதக்கோளாறுகள், நினைவின்மை [illegible] பேச்சு முதலியன காண்பது அசாத்தியமாகும்.

(12) ஜிஹ்வகம்:—நாக்கில் கடுமையான தடிப்பு, கடும்முள்ளுத்தன்மை, இருமல், இளைப்பு, சுரம், ஊமைத்தன்மை, செவிட்டுத்தன்மை, பலக்குறைவு, முதலியன காண்பது அசாத்தியக் குறிப்புகளாகும்.

(13) அபின்யாஸம்:—திரேகச்செயல்களின் தடை, வார்த்தைகளின் அடக்கம், கண்ணொளிமங்கல், வாயின் பிசுபிசுப்பு, திரிதோஷ லக்ஷணங்களின் குறிப்புகள் பலவுண்டாம். இது மிக அசாத்திய மாகும். மேல் கூறியுள்ள வேற்றுமைகள் தோஷங்களின் அம்சாம்சச்சேர்க்கைகளின் ஏற்றக்குறைவுகளினால் ஏற்படுகின்றனவென்று முன்னுரையில் கூறப்பட்டது. முத்தோஷஜ்வரம் ஒன்றுதானாயினும் கிரியா ஸௌகரியங்களையும் ஸாத்தியாஸாத்தியக் குறிப்புகளையும் காண்பிப்பதற்காக தனித்தனிக் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. இக்குறிப்புகள் பலவும் இப்பிணியின் உபத்ரவரூபமானவைகளே யாகும். அதுகளில்பல அரிஷ்ட லக்ஷணங்களுமாகும், குணா குணங்களைக் கவனிக்க ஸந்திகம், தந்திரிகம் கண்டகுப்ஜம், ஜிஹ்வகம், சித்தவிப்ரமம் ஆகிய ஆறு வேற்றுமைகள் ஸாத்தியங்களாகும். (கஷ்டப்பட்டு) பாக்கியுள்ள அந்தகம், ருக்தாகம், சீதாங்கம், புக்னநேத்திரம், பிரலாபகம், ரத்தஷ்டீவி, அபின்யாஸம், ஆகிய ஏழும் அஸாத்தியங்களாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் இதுகளின் ஆராய்ச்சியில் ஸந்திகத்தில் 7 நாட்களும் அந்தகத்தில் நாட்கள் 10 ருக்தாகத்தில் நாட்கள் 20 சித்தவிப்ரமத்தில் நாட்கள் 8 (28 நாட்களென்றும் கூறுகின்றனர்) சீதாங்கத்தில் நாட்கள் 15, தாந்திரிகத்தில் நாட்கள் 25, கண்டகுப்ஜத்தில் நாட்கள் 13, கர்ணகத்தில் நாட்கள் 90, புக்னநேத்திரத்தில்நாட்கள் 8, ரத்தஷ்டீவியில் நாட்கள் 10, பிரலாபத்தில் நாட்கள் 14, ஜிஹ்வகத்தில் நாட்கள்16, அபின்யாஸத்தில் நாட்கள்15, என்றுகண்டிருப்பதால் இந்நாட்களுள் ஷெடி தோஷங்கள் தாதுக்கள் மலங்கள் முதலியவற்றின் பாகமேற்பட்டுக் கெடுதல்களையோ நன்மைகளையோ ஏற்படுத்துமென்று இதன் விளக்கமாகும். மேலும் வாதாதிக ஸன்னிபாதத்திற்கு நாட்கள் 7, பித்தாதிகத்திற்கு நாட்கள் 9, கபாதிகத்திற்கு நாட்கள் 11 அல்லது இந்நாட்களின் இரட்டிப்புப்பெற்ற நாட்கள்

குண தோஷ மரியாதைகளாகின்றன. ரோகியின் முடிவு இக்கெடுவு களுள் தாது மல பாகங்களைப்பொறுத்திருக்கின்றன. மூக்கக்களை யின் மங்குதல் காது நாக்குகளில் ஜில்லிப்பு, இரேகத்தின் நிறமாற்றம், கைகால்களின் அசைவின் குறைவுகள், வியர்வைப்பெருக்கு, நாடியின் ஸ்தான பிரஷ்டம், பற்களில் கருப்பு, தொண்டை பேச முடியாத்தன்மை, தொண்டையில் கபம் பேசுதல், காது செவிடாவது, குளிர்ச்வாஸம், கண்ணொளிமங்கல், கண் கோவைகளின் அசைவின்மை நாடியின் வேகக்குறைவு முதலியன ரோகியின் மரணத்தைக் காண்பிக்கும் அரிஷ்டங்களாகும். வாதாதி தோஷங்களின் கெடுதல்களை விளைவிக்கும்முன் காரணங்களும் அறிகுறிகளுமில்லாமல் திடீரென்றுண்டாய்க்காணும் சுரம் ஆகந்துகமெனக் குறிக்கப்படுகிறது. ஏவல், சாபம், அடிபடுதல், விஷக்கெடுதல், காமம், சோகம், பயம் முதலியவற்றினால் என்னேரத்தும் ஜ்வரமுண்டாகக்கூடும். இதுகளில் பலவிதக்குறிப்புகளும் தொந்திரவுகளும் காண்கின்றன. அதுகளின் விவரங்களை ரோக பரீக்ஷையின் போது தெரிந்துகொள்வதே நலம். இதுகளில் ஏகதோஷம், இவிதோஷம், திரிதோஷம், கோபமடைகின்றன. ஆதலால் தோஷ கோப லக்ஷணக்ரியைகளை விளங்கியபின் பரிஹாரம் தரப்படவேண்டும். மேலும் இதன் பிரிவினையின் விஷமம் என்றும் ஓர் இவற்றுமை யிருக்கின்றது. இவ்வேற்றுமையில், ஸந்ததம், ஸததம், அன்யேத்யுஷ்கம், திருதியகம், சதுர்த்தகம் என்னும் ஐந்து பிரிவினைகள் ஏற்பட்டுள்ளன. இம்முறைகளை ஆதுனிக வைத்யர்கள் மலேரியா என்கிறார்கள்.

"ய:ஸ்யாதனி யதாத்காலாத்" என்ற வாக்கியப்படி எந்தசுரமாவது கால நிர்ணயத்தைப் பொறுக்காது அதிகமாகவும், குறைவாகவும் சீத உஷ்ண வேகங்களினால் விகிருதரூபமாய் காணப்படுகின்றதோ அஜ்ஜ்வரம் விஷமமென்று கூறப்படுகின்றது. ஆகையால் இக்கால ஜனங்களுக்கு இலகுவாய் புலப்படும் முறையில் இதை மலேரியா அல்லது மலைக்காய்ச்சல் எனக் குறிப்பிடத்தடையில்லை. இஜ்ஜ்வரத்தின் ஆரம்பம்முதல் விடுவதுவரையில் மூன்று அவஸ்தைகளிருக்கின்றன. அதாவது சீதாவஸ்தை, உஷ்ணாவஸ்தை, ஸ்வே

தாவஸ்தை (வியர்வை) எனப்படும். சீதாவஸ்தையில் (ஜுரம் வருவதற்குமுன்) திரேகத்தில் குளிர்ச்சி, திரேக நடுக்கம், தன்னிமித்தம் அனல் வெய்யில் காயவிருப்பம் கம்பிளிவஸ்திரங்களால் சரீரத்தை மூடிக்கொள்ளும் எண்ணம் முதலியன உண்டாகும் உஷ்ணாவஸ்தையில் திரேகத்தில் மிகுதியான உஷ்ணம், எரிச்சல், வாந்தி, தலைவலி. மயக்கம், தண்ணீர்தாகம், அதிக மூத்திரப்பிரவிருத்தி, மூத்திரத்தின் நிறவேற்றுமை, பிதற்றல் முதலியன கண்டு சைத்யோபசாரத்தைத் தேடும். ஸ்வேதாவஸ்தையில் சுரத்தின் வேகக்குறைவு, திரேகத்தில் வியர்வை, தண்ணீர்தாகம் சுரசமனம், திரேகவலிக் குறைவு மற்றும் சுர லக்ஷணங்களின் மறைவு ஸாதாரண உஷ்ண நிலைவு முதலியன வுண்டாகும், மறுபடியும் லக்ஷணமுறைப்படி உண்டாவதும் விடுவதுமாகும்.

ஓஷதி—ஸந்தேஹம்.

(திருச்சி ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள்)

பிராம்ஹீ — இது பிராசீன ஆயுர்வேதக் கிரந்தங்களில் மேத்யம், ஸ்வர்யம், குஷ்டஹரம், உன்மாதாபஸ்மாரஹரம், வெகு சீக்கிரத்தில் வாக்சுத்திகர மென்றும் வெகுவாகப் புகழ்ந்து கூறப்படுகிறது. இந்தக்காலத்திலும் வைத்தியர்கள் பிராம்ஹீ கிருதம், ஸாரஸ்வத கிருதம், பிராம்ஹீ பானகம், தைலம் முதலியவைகளைத் தயாரித்தும் உபயோகித்தும் வருகின்றனர். மஹா குணம் பொருந்திய இந்த ஓஷதி எது என்பதில் நிச்சயம் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரியவில்லை. நீர் பிராம்மீ அல்லது பிராம்மீ வழுக்கை என்று தமிழ் தேசங்களில் சொல்லப்படும் சிறியதும், மழமழப்புமுள்ள இலைகளையுடைய கொடியே பிராம்ஹீ என்று சிலர். வல்லாரைதான் பிராம்ஹீ என்று சிலர். வல்லாரை மண்டூக பர்ணீயாகும் பிராம்ஹீ அல்ல என்று சிலர். இந்த ஓஷதியில் மதபேதம் தமிழ்தேசம் போல் மற்ற தேசத்திலும் இருக்கிறதாகவே தோன்றுகிறது. வட இந்தியா மேற்குப்புறங்களில் பம்பாய் மாகாணத்தில் வல்லாரையை பிராம்ஹீ எனக் கருதுகின்றதாகவும், வங்காளம் முதலிய கீழ்பிரதேசத்தில் நீர் பிராம்ஹியாகக் கருதுவதாகவும் கேள்விப்படுகிறேன்.

இந்த ஔஷதி இதுதான் என்ற நிச்சயம் குருபரம்பரையில் வரும் ஞானத்தினால் உண்டாகவேண்டும், ஆராய்ச்சியினாலும் திருடப்படுத்திக்கொள்ள வேண்டும்! இப்போது பிராம்ஹீயை உபயோகிப்பவர்கள் எந்தத்திரவியத்தை உபயோகிக்கிறார்கள்? எதனுடைய உபயோகத்தில் புஸ்தகங்களில் சொன்ன குணங்களில் ஏகதேசமாகிலும் நிச்சயமாக இதற்கு இருக்கிறது என்று சொல்ல முடியும்? இந்த விஷயங்களை தயைசெய்து அனுபவம் வாய்ந்த வைத்திய சகோதரர்கள் தங்கள் அனுபவத்தையும், அபிப்பிராயத்தையும் ஆதாரத்துடன் சந்திரிகையில் பிரகாசம் செய்தால் மிகவும் உபகாரமாயிருக்கும்.

இந்த ஸந்தேஹத்தில் அடியிற்காணுமாறு ஸந்தேஹமோ ஆக்ஷேபமோ சிலருக்குத்தோன்றக் கூடியது. "சாஸ்திரங்களில் சொல்லியுள்ள குணங்கள் திரவியங்களுக்கு அனுபவத்தில் காண வேண்டுமாகில் சாஸ்திர விஹித பஞ்சகர்மாக்களினால் சரீரத்தைச் சுத்திசெய்து கொண்ட பிறகு அந்தத்திரவியங்களை உபயோகித்தால்தான் காணமுடியும் சோதனமில்லாமல் ஔஷதி விசேஷத்தின் குணங்களை எதிர்பார்க்க முடியாது என்று" இது உண்மையே. ஆயினும் சோதனம் செய்து உபயோகித்தால் சீக்கிரம் ஸ்திரமான லாபம் கிடைக்கலாம். சோதனம் இல்லாவிடினும் திரவியப்பிரபாவம் சரீரத்தில் பூர்ணமாக ஏற்படாவிடினும் பாதியாவது குணத்தைக் காண்பித்ததே தானாகவேண்டும். மற்ற எல்லா திரவியங்களிலுமே நாம் இந்தக்காலத்தில் செய்துவரும் அனுபவ சிகித்சையில் சாஸ்திரப்படிக்குப் பூர்ண குணங்களைக் காணாவிடினும் குணமில்லாமல் போகவில்லை. இவ்வாறே பிராம்ஹியிலும் உன்மாதம், அபஸ்மாரம், குஷ்டம் பஸ்வபேதம், முதலிய ரோகங்களிலும் மேதா வாக்ஸித்தி முதலிய ரஸாயன பாகத்திலும் எந்த அளவிலாவது நமக்கு குணம் நிச்சயித்துச்சொல்லும்படியாக இருக்கிறதாவென்று அறியமுடிய வேண்டும் இதிலும் இதுபோன்ற விஷயங்களிலும் நமது வைத்திய ஸோதரர்களும், பத்திரிகாசிரியரும் உபகாரம் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

V. B. நடராஜ சாஸ்திரி,
ஆயுர்வேதாசார்ய, திருச்சி.

ஆயுர்வேதாசார்ய ஸ்ரீயான் V. B. நடராஜசாஸ்திரிகள் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்னை வெகு முக்கியமானதாகும். சில ஓஷதிகளில் சந்தேகமும் மாறுபாடும் இருப்பதைப் பலரும் அறிவர். பிரம்மீ என்றும் வல்லாரை என்றும் இரண்டு ஓஷதிகள் உருவத்தில் மிகவும் வேறுபட்டவைகளாகக் காணப்படுகின்றன. இவைகளில் உருவங்களைக் கவனிக்கும் பாலர்கள் கூட இரண்டும் ஒரு வகையெனக் கூறமுடியாதபடி மிகவும் வேற்றுமையுள்ளவைகளாக இருக்கின்றன. ஆனால் இருவகையும் ஜலம் கசிந்தவிடத்தில்தான் உண்டாகின்றன. இனி இவைகளைப்பற்றிச் சொல்லும் நூல்களை கவனிப்போம். ஆயுர்வேதத்தில் பல நிகண்டுகள் இருந்தபோதிலும் பாவப்பிரகாசத்தில் காணப்படும் நிகண்டு முதன்மையானது. அந்த நூலுக்கு ஆசிரியர் முதிர்ந்த அனுபவம்பெற்ற வைத்தியர் ஆகையால் அவர் சுயமாக இயற்றியுள்ள நிகண்டுவிற்கு மிகுந்த கௌரவமுண்டென்பதை மறுக்கமுடியாது. அவர் கூறுவதாவது—

அத ப்ராம்ஹீ, ப்ரஹ்ம மண்டூகீ ச

இதன் பொருள்—இனி ப்ராஹ்மீ என்ற ஓஷதியின் குணத்தையும், பிரம்ம மண்டுகீ என்ற ஓஷதியின் குணத்தையும் சொல்லுகிறோம். குறிப்பு:—இவ்விடத்தில் சொல்லப்படும் ப்ராஹ்மீ என்ற ஓஷதி ஹிந்தியில் பிரம்மி என்று மாறுபட்டுத் தமிழில்பிரமி என்று அழைக்கப்படுகிறது. ப்ரஹ்ம மண்டூகீ என்ற ஓஷதி தமிழில் வல்லாரையென அழைக்கப்படுகிறது. இனிப்ராஹ்மீ என்ற பிரமியின் பர்யாயங்களை பாவப்பிரகாசம் அடியிற் காணுமாறு கூறுகின்றது.

ப்ராஹ்மீ கபோதவங்கா ச ஸோமவல்லீ ஸரஸ்வதீ |

இதன் பொருள்—ப்ராஹ்மீ, கபோதவங்கா, ஸோமவல்லீ, ஸரஸ்வதீ, எனப்பிரமிக்கு நான்கு பெயர்கள். இனிப்ரஹ்ம மண்டூகீ என்ற வல்லாரையின் பர்யாயங்களை ஷை நூல் அடியிற் காணுமாறு கூறுகின்றது—

மண்டூகபர்ணீ மாண்டூகீ த்வாஷ்ட்ரீ திவ்யாமஹௌஷதீ |

இதன் பொருள்—மண்டூக பர்ணீ மாண்டூகீ, த்வாஷ்ட்ரீ, திவ்யா, மஹௌஷதீ, என ஐந்து பெயர்கள். இனி இவற்றின் குணங்களைப் பற்றி மேலும் கூறுவதாவது—

ப்ராஹ்மீ ஹிமா ஸராதிக்தா லகுர் மேத்யா ச சீதளா |
கஷாயா மதுரா ஸ்வாதுபாகாயுஷ்யா ரஸாயனீ |
ஸ்வர்யா ஸ்மிருதிப்ரதா குஷ்ட பாண்டு மேஹாஸ்ர காஸஜித்-
விஷ சோத ஜ்வர ஹரீ தத்வன் மண்டுக பர்ணினீ |

இதன் பொருள்—பிரம்மீயின் குணங்களாவன—சீதவீர்யமுள்ளது, ஸரா, திக்தா, லகு, மேத்யா, கஷாயா, மதுரா, மதுரபாகா, ஆயுஷ்யா, ரஸாயனீ, ஸ்வர்யா, ஸ்மிருதிப்ரதா, குஷ்டம் பாண்டுமேஹம் ரக்தபித்தம் காஸம் இவைகளைத் தீர்க்கவல்லது விஷம் சோதம் ஜ்வரம் இவைகளை விலக்க வல்லது. பிரமீபோலவே வல்லாரையும் பூர்வகுணங்களுள்ளது. இங்கு பிரமிக்கும் வல்லாரைக்கும் ஓரே விதமான குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே பாவப் பிரகாசப்படி ப்ராஹ்மீ என்பது பிரமி என்றும் மண்டுகபர்ணீ என்பது வல்லாரை என்றும் சித்திக்கின்றது. அஷ்டாங்க ஹிருதயம் முதலியவைகளில் உன்மாதாபஸ்மார சிகித்சைகளில் சொல்லப்பட்டமருந்துகளில் ப்ராஹ்மீ என்று இருக்குமிடங்களில்பிரமியை எடுத்துக்கொள்ளவேண்டும். அஷ்டாங்க ஹிருதயத்தில் ரஸாயனாதிகாரத்தில் "மண்டுகபர்ணீ மபி பக்ஷயந்த:" என்பனபோன்ற முறைகளில் வல்லாரையை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலர்கள் வல்லாரையைப்பற்றிச் சொல்லும்பொழுது—Action-Alterative tonic, என்றும் இதன் உபயோகத்தைச் சொல்லும்பொழுது—In elephantiasis, anaesthetic, leprosy, syphilis, both locally and internally in ulcers and skindiseases, dysentery of children. ஆனைக்காலுக்கும், ஓர்வித கண்ட ரோகத்திற்கும், மேகத்திற்கும், மேகநோய்க்கும், புண்களுக்கும் சர்ம ரோகங்களுக்கு உள்ளுக்கும் வெளிக்கும், குழந்தைகளின் அதிசாரத்திற்கும் உபயோகமாகின்றது. என்று வல்லாரையை ஏறக்குறைய பாவப்பிரகாசத்தைப் பொட்டியே பேசுகின்றனர். ஆனால் நீர்ப்பிரமியைச் சாதாரண குணமுள்ளதாகக் கூறியிருக்கின்றனர். ஹோமியோபதி முறையில் வல்லாரையையே வெடி ரோகங்களில் உபயோகிக்கின்றனர். உன்மாதாபஸ்மாரங்களில் பிரமியும், மற்றநோய்களிலும் ரஸாயன முறைகளிலும் வல்லாரையும், எடுத்துக்கொள்வது நியாயமாகின்றது. இரண்டு சரக்குகளுக்கும் குணம்ஒன்றாக நூல்